பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
27. 12. 2024 **FRIDAY** 7. 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மறைவுக்கு தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

2. அரசு திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

3. பாரம்பரிய விதைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

4. வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் **Jake Sullivan**-னுடன் வாஷிங்டனில் பேச்சு நடத்தினார்..

5. அஹமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்மி பிரபா – ராஜேஷ்வரன் ரேவதி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>><<<<<<**

முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான டாக்டர் மன்மோகன் சிங் காலமானார். அவருக்கு வயது 92.

மூச்சுத்திணறல் காரணமாக பாதிக்கப்பட்ட அவர், தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு உயிரிழந்தார்.

1932ஆம் ஆண்டு செப்டம்பர் 26 அன்று பஞ்சாப் மாநிலம், காஹ் கிராமத்தில் அவர் பிறந்தார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் 2004ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை பத்தாண்டுகள் அவர் பிரதமராக பதவி வகித்தார்.

1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை நரசிம்மராவ் ஆட்சியில், நிதியமைச்சகராக பதவி வகித்தார்.

1991ஆம் ஆண்டு முதல் 33 ஆண்டுகாலம் மாநிலங்களவை உறுப்பினராகவும், 1998ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவரகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் பொருளாதார துறையில் முனைவர் பட்டம் பெற்ற மன்மோகன் சிங், நிதியமைச்சராக இருந்த காலத்தில் நாட்டின் நிதி சீர்திருத்தங்களுக்கு பெரும் பங்காற்றி, பலரது பாராட்டையும் பெற்றுள்ளார்.

தலைமை பொருளாதார ஆலோசகர், ரிசர்வ் வங்கி ஆளுநர், திட்டக் குழுவின் துணைத்தலைவர் உள்ளிட்ட பல்வேறு உயர் பொறுப்புகளை அவர் வகித்துள்ளார்.

அத்துடன் பத்ம விபூஷன் உள்ளிட்ட உள்நாடு மற்றும் சர்வதேச விருதுகளையும் அவர் பெற்றுள்ளார்.

மன்மோகன் சிங் மறைவுக்கு தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், நாட்டின் பொருளாதார சீர்திருத்தத்திற்கு மன்மோகன் சிங் பெரும் பங்காற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு அவர் ஆற்றிய சேவைகள் என்றென்றும் நினைவுகூரப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் வெளியிட்டுள்ள செய்தியில், மறைந்த மன்மோகன் சிங், இந்தியப் பொருளாதார தாராளமயமாக்கலின் சிற்பியாக திகழ்ந்தார் என்றும், முக்கிய மாற்றத்தின் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கான புதிய வழிகளை கண்டறிந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், எளிய குடும்பத்தில் பிறந்த மன்மோகன் சிங், மதிக்கத்தக்க பொருளாதார நிபுணராக உயர்ந்தார் என்று கூறியுள்ளார்.

அவரது நாடாளுமன்ற செயல்பாடுகள் நுண்ணறிவுமிக்கதாக இருந்ததாகவும், தாம் பிரதமராக இருந்த போது மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த பெரும் முயற்சிகளை மேற்கொண்டார் என்றும் தெரிவித்துள்ளார்.

நாடு ஒரு மிகச் சிறந்த தலைவரை இழந்துவிட்டதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள செய்தியில், தொலைநோக்கு சிந்தனை கொண்ட பெருந்தலைவரை நாடு இழந்துள்ளதாக கூறியுள்ளார்.

மன்மோகன் சிங்கின் பொருளாதார நடவடிக்கை கோடிக்கணக்கான இந்தியர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்தது என்றும், லட்சக்கணக்கானவர்களை வறுமையிலிருந்து விடுவித்து நடுத்தர வகுப்பினராக உருவாக்கியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், மன்மோகன் சிங்கின் எளிமையும், பொருளாதாரம் குறித்த ஆழமாக புரிதலும் நாட்டின் முன்னேற்றத்திற்கு உத்வேகம் அளித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில், பிரதமராக பதவி வகித்த மன்மோகன் சிங்கின் திட்டங்கள் அனைத்து துறைகளிலும் தமிழகத்தின் வளர்ச்சியை வலுப்படுத்தியதாக கூறியுள்ளார்.

அவருடைய பேரறிவும், பணிவும், தொண்டும் எதிர்கால தலைமுறையினருக்கு ஊக்கமூட்டி வழிகாட்டட்டும் என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திரு. ஜெ.பி. நட்டா, திரு. அஸ்வினி வைஷ்ணவ் உள்ளிட்டோரும் அன்னாரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனார்.

**>>>>>><<<<<<**

அரசு திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டில் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்று வரும் ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கும் கூடுதலான மதிப்புடைய ஒன்பது முக்கிய திட்டங்கள் குறித்து அதிகாரிகளுடன் நேற்று அவர் ஆய்வு செய்தபோது இதனை தெரிவித்தார்.

இதற்கான கூட்டத்தில் 6 மெட்ரோ ரயில் திட்டங்கள், சாலை இணைப்பு, அனல் மின்சாரம் தொடர்புடைய திட்டம் ஆகியவற்றில் நடைபெற்று வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளுன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

திட்டங்களை செயல்படுத்துவதில் உண்டாகும் தாமதங்கள், செலவுகளை அதிகரிப்பதுடன் பொதுமக்கள் எதிர்பார்க்கும் பயன்களை அளிப்பதில்லை என்பதால், மத்திய – மாநில அரசு அதிகாரிகள் உரிய நேரத்தில் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

வங்கி காப்பீட்டு துறை தொடர்பான பொதுமக்களின் குறைகள் குறித்தும் அவர் ஆய்வு செய்தார்.

திட்டங்களை செயல்படுத்தும் போது, பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு உரிய காலத்தில் மறுவாழ்வு, மறுகுடியமர்வு அளிக்க வேண்டியது அவசியம் என்று திரு. நரேந்திர மோடி கூறினார்.

**>>>>>><<<<<<**

பாரம்பரிய விதைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக புதுதில்லியில் இந்திய விதை கூட்டுறவு சங்க ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், அடுத்த ஓராண்டுக்குள் மேலும் 20 ஆயிரம் கூட்டுறவு சங்கங்களை இந்திய விதை கூட்டுறவு சங்கத்துடன் இணைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

குறைந்த அளவு நீர் தேவைப்படும் வகையிலான விதைகளை உருவாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சிறு விவசாயிகள் அதிக மகசூல் பெறும் வகையிலும், பயிர்களின் முதிர்வு காலம் அதிகரிக்கும் வகையிலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று திரு. அமித் ஷா கேட்டுக் கொண்டார்.

**>>>>>><<<<<<**

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் **Jake Sullivan**-வை வாஷிங்டனில் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்..

அமெரிக்காவில் ஆறுநாள் பயணம் மேற்கொண்டு வரும் அவர், பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் திரு. **Jake Sullivan**-ருடன் ஆலோசனை நடத்தினார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சரை, திரு. ஜெய்சங்கர் சந்தித்து, பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்கவுள்ளார்.

**>>>>>><<<<<<**

கேரள மாநிலம், திருவனந்தபுரம் புறநகர் பகுதியில், நடப்பாண்டில் 23 பழங்குடியினர் தற்கொலை செய்து கொண்ட விவகாரம் குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை மேற்கொள்கிறது.

இதுகுறித்து இரண்டு வாரங்களுக்குள் விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறு கேரள மாநில தலைமைச் செயலாளர், காவல்துறை இயக்குநர் ஆகியோருக்கு அந்த ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பெரிங்கமாலா பஞ்சாயத்துப் பகுதியில் மட்டும் அதிகபட்சமாக 138 பழங்குடியினர் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இரண்டாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அப்பகுதியில் தற்கொலை சம்பவங்கள் அதிகரித்து வருவதாக தேசிய மனித உரிமைகள் ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

**>>>>>><<<<<<**

குஜராத் மாநிலம், போர்பந்தரிலிருந்து 311 கிலோமீட்டர் தொலைவில் கடலில் மூழ்கிய படகிலிருந்து 9 பேரை கடலோர காவல்படை மீட்டது.

குஜராத் மாநிலம், முன்ட்ரா பகுதியிலிருந்து ஏமன் நாட்டிற்கு அந்த கப்பல் சென்று கொண்டிருந்த நிலையில், கடல் கொந்தளிப்பு காரணமாக, கடல்நீர் படகிற்குள் புகுந்ததால், மூழ்கியது.

மீட்புப் பணியை மும்பை மற்றும் பாகிஸ்தானின் கராச்சியைச் சேர்ந்த கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையங்கள் இணைந்து மேற்கொண்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**>>>>>><<<<<<**

ராஜஸ்தான் கிழக்குப் பகுதி, பஞ்சாப், மத்தியப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதி, ஹரியானா, சண்டிகர், தில்லி, மஹாராஷ்ட்ரா, குஜராத் ஆகிய மாநிலங்களில் பலத்த காற்றுடன் இன்று மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அஸ்ஸாம், மேகாலயா மாநிலங்களில் இரவு மற்றும் காலை நேரங்களில் பனிமூட்டம் காணப்படும் என்று அது கூறியுள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசத்தில் கடும் குளிர் நிலவக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

**>>>>>><<<<<<**

அஹமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்மி பிரபா – ராஜேஷ்வரன் ரேவதி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 2-6, 6-4, 10-7 என்ற செட்கணக்கில் மற்றொரு இந்திய இணையான காஷிவ்ஷ் பாட்டியா – அஞ்சலி ரதி இணையை வென்றது.

மற்ற போட்டிகளில் ஆகான்ஷா நித்தூர் - சோஹா சாதிக் இணையும், வைஷ்ணவி அட்கர் - பூஜா இன்கேல் இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

>>>>>><<<<<<

மெல்போர்னில் நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று, ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் உணவுஇடைவேளை வரை 7 விக்கெட் இழப்புக்கு 454 ரன் எடுத்துள்ளது.

ஸ்டீவ் ஸ்மித் 139 ரன் எடுத்துள்ளார்..

>>>>>><<<<<<

இந்தியா – வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

வதோதராவில் நடைபெறவுள்ள இப்போட்டி காலை மணி 9.30-க்கு தொடங்குகிறது.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இந்த தொடரில் இரண்டு போட்டிகளில் இந்திய அணி ஏற்கனவே வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியுள்ளது.

>>>>>><<<<<<

புரோ கபடி லீக் போட்டியில் உத்தரபிரதேசம், பாட்னா அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

நேற்று நடைபெற்ற எலிமினேட்டர் சுற்றில் உத்தரபிரதேசம் 46-18 என்ற புள்ளிக்கணக்கில் ஜெய்ப்பூரை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் பாட்னா 31-23 என்ற புள்ளிக்கணக்கில் மும்பையை வென்றது.

இன்று நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டிகளில் ஹரியானா – உத்தரபிரதேசத்தையும், தில்லி – பாட்னாவையும் எதிர்கொள்கின்றன.

>>>>>><<<<<<

சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டியில், மேற்குவங்க அணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதி ஆட்டத்தில் அந்த அணி, 3-1 என்ற கோல்கணக்கில் ஒடிசா அணியை வென்றது.

**>>>>>>END<<<<<<**